[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 மார்ச் 19

முற்பகல் 10-15

42. இந்த அரசு பொறுப்பேற்றபின் இதுவரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,515 விரிவுரையாளர்களும், அரசு பொறியியல் மற்றும் பலதொழில்நுட்பக் கல்லூரிகளில் 279 விரிவுரையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அரசுக் கல்லூரிகளிலும் பலதொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சுழற்சி முறை (Shift system) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் சுய நிதிப் பாடப் பிரிவுகள் கட்டணமில்லாத பொதுப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளன. பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்பக் கல்விச் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு முறை நீக்கப்பட்டுள்ளது. பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள், கல்விக் கட்டணம் இன்றித் தொழில் கல்வி பயிலும் திட்டத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

43. 2007-2008 ஆம் ஆண்டிலிருந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணத்தை இந்த அரசுதான் இரத்து செய்தது. வரும் கல்வியாண்டிலிருந்து அரசுக் கல்லூரிகளில் M.A., M.Sc., போன்ற முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் இரத்து செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக மாணவர்கள் கட்டணச் செலவின்றி உயர் கல்வி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

44. கடந்த இரண்டு ஆண்டுகளில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்மூலம் பண்ணுருட்டி, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நகரங்களில் தொடங்கப்பட்ட புதிய பொறியியல் கல்லூரிகளுக்குத் தேவையான கட்டடங்கள் ரூபாய் 93 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் கட்டப்படும். வரும் நிதியாண்டில் அரசு பொறியியல் மற்றும் பலதொழில்நுட்பக் கல்லூரிகளில், 50 வகுப்பறைகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வகங்கள் கட்டுவதற்கும், 19 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரூபாய் 3 கோடியே 89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல்லை